# திராவிடநாடு

10—9—61 | வார வெளியீடு | விலை 16 காசு


## வரலாற்றை மாற்றிடுவோம்!

—[ சு. அப்பாவு ]—

கூடுகட்டி வாழ்கின்ற பறவை கட்கும்
சொந்தமுள்ள கூடுண்டு, நாமோ சொந்த
வீடுகட்டி வாழ்கின்றோம், ஆனால் சொந்த
நாடில்லை; உரிமையில்லை வாழ்வு இல்லை;
பாடுபட்டு உழைக்கின்றோம் வேர்வை சொட்ட,
பலனில்லை பசித்துன்பம் போக வில்லை
தேடுகின்ற பொருளனைத்தும் தென்ன கத்தில்
தங்காது வடக்குக்குச் செல்வதைக் காணீர்!

கூவுகின்ற குயிலுக்கும் சொந்த முள்ள
குரலுண்டு; மொழியுண்டு; மாற்று தற்கு
பூவுலகில் எவராலே முடியும் சொல்வீர்!
புரிந்திடுவீர்! அறிந்திடுவீர்! புறப்ப டுவீர்!
தேவநாகரி லிபிமுறையை தென்ன கத்தில்
திணிக்கின்றார் ஆட்சியது ஆதிக் கத்தால்
ஏவலராய் வடக்குக்குக் காவடி தூக்கும்
இந்தநிலையை வரலாற்றை மாற்றிடுவோம்!

# சின்னப் புத்தி

பிற்பகல் வேளை. வெம்மையை வாரி இறைத்துக்கொண்டிருந்த செஞ்ஞாயிறு தணிந்து இறங்குவதற்குத் தயங்குவதுபோல் மேல் வானில் சரிந்துகொண்டிருந்தது. தொலைவிலிருந்த மணிக்கூண்டு மணி மூன்று என்பதை அறிவித்த ஒலி காற்றோடு கலந்துவந்து, மலையனின் காதோடு உராய்ந்தது. திடுமென எழுந்தான் அவன். அருகிலிருந்த தட்டையொத்த பெரிய கூடையில், பரப்பிவைக்கப்பட்டிருந்த பாத்திரங்களின் மீதிருந்த சும்மாட்டுத் துணியைத் தலையில் எடுத்து வைத்துக்கொண்டு, சுற்றுமுற்றும் ஒரு முறை பார்த்துவிட்டுக், கூடையைத் தூக்கினான் அவன். இரண்டடி எடுத்துவைத்தான்.

"ஐயா, ஐயா, பழைய பாத்திரம் வாங்கிக்கிட்டு, புதுசு தர்றீயா?"

"புதுசு வாங்கக் காசு கொண்டு வந்திருக்கிறீயா?" என்று கேட்க நினைத்த மலையன் பின்புறம் திரும்பினான்.

செழுமையும், கொழுமையும் நிறைந்த சிறுமியொருத்தி அவன் எதிரில் நின்றாள். பட்டுப் பாவாடையும், பட்டுச் சட்டையுமாகக், கழுத்தில் இரட்டைப் பொற்சங்கிலியணிந்து, காலிற்கலீரெனும் கொலுசோடு கோலங்காட்டி, தான் செல்வச் செழிப்பில் வளர்ந்துவருபவள் என்பதை மலையனிடம் அறிவுறுத்திக்கொண்டு நின்றாள் அவள்.

மலையன், தான் கேட்கநினைத்ததை மனத்தோடு நிறுத்திக்கொண்டான். "என்னாபாத்திரம் பாப்பா வேணும்?" என்று குழைந்து கேட்டவண்ணம் திரும்பவும் பாத்திரக் கூடையை இறக்கிக் கல்லின்மீது வைத்தான்.

"இதோ, இதை வச்சிக்கிட்டு எனக்கொரு மூக்குப்பாத்திரம் குடு" என்று தன்கையில் வைத்திருந்த குவளையை மலையனிடம் நீட்டினாள் சிறுமி.

சிறுமி நீட்டிய குவளையை மலையன் வியப்பு நோக்கோடுபார்த்தான்.

"இந்தப் பாத்திரம் எவர் சில்வர் பாத்திரமாச்சே பாப்பா! இது விலை அதிகமாச்சே! இதை யார் குடுத்து விட்டது?"

"யாரும் குடுத்துவிடல்லே. நானாத்தான் எடுத்துக்கிட்டு வந்தேன்."

"ஐயோ, அம்மாவுக்குத் தெரியாமே எடுத்துக்கிட்டு வந்துட்டியா? வேண்டாம்மா, வீட்டிலே கொண்டு போய் வைத்துவிடு."

"ஊகும். அம்மாவுக்குத் தெரியாமே இல்லே. அம்மாதான் எடுத்துக்கிட்டுப்போன்னு சொன்னாங்க',

"உம்..." பெருமூச்சுவிட்டவாறு திகைத்து நின்றான் மலையன்.

"எனக்கு விளையாடறதுக்கு மூக்குப் பாத்திரம் வேணுமின்னு அம்மாவைக் கேட்டேன். அம்மா மூக்குப் பாத்திரம் வாங்கக் காசு இல்லேன்னு

**கனகு**

சொல்லிட்டாங்க. நான் திரும்பத் திரும்பக் கேட்டுக்கிட்டே இருந்தேன். அப்புறம், "வீட்டிலே இருக்கிற ஏதாவது பழைய பாத்திரத்தைக் கொண்டுபோய்க் கொடுத்திட்டு மூக்குப் பாத்திரம் வாங்கிக்க, போ"ன்னு அம்மா சொன்னாங்க. நான்—எங்க வீட்டிலே இருக்குது பாரு வெள்ளித் தாம்பாளம், அதைத் தூக்கிக்கிட்டு ஓடியாந்தேன். அப்போ அம்மா அதைப் புடுங்கிக்கிட்டாங்க. 'போடி மூக்குப் பாத்திரமும் வேண்டாம். ஒண்ணும் வேண்டாம்' அப்புடின்னு அதட்டினாங்களா, நான் திரும்பவும் அழுதேன். அப்போ, அம்மாதான் 'இந்த டம்பளரை எடுத்துக்கிட்டுப் போய்த்தொலை'ன்னு சொன்னாங்க."

"மெய்யா அம்மாதான் எடுத்துக் குடுத்தாங்களா?"

"ஐயோ—நீ ஒண்ணுமே தெரியாத பாத்திரக்காரராய் இருக்கிறீயே! நான் பொய்யா சொல்லுவேன்! எங்க வீட்டிலே இந்த மாதிரி டம்பளர் எவ்வளவு இருக்குது தெரியுமா? — எங்க வீட்டிலே வந்து பார்த்தாத்தானே தெரியும் உனக்கு!" என்று அந்தக் குழந்தை ஒரு கையைத் தாடையில் வைத்தவாறு கெக்கொலியும், குறுநகையுமாகப் பேசிய பேச்சுக்களைச் சுவைத்துக் கேட்டபடி மௌனமாக நின்றான் மலையன்.

"இந்தா, இதை வச்சிக்கிட்டு மூக்குப்பாத்திரம் குடு" என்று திரும்பவும் அந்தச் சிறுமி கேட்டாள்.

"இது வெலை அதிகமாச்சே! இதை வச்சிக்கிட்டு ஈயப்பாத்திரம் தரச் சொல்றீயே!" என்று தனக்குள் பேசிக்கொள்பவன்போல் கூறிவிட்டு, "அப்படியானால் ஒண்ணு செய்யலாமா பாப்பா! இந்த எவர் சில்வர் பாத்திரத்துக்கு ரெண்டரை ரூபா வெலை போட்டுக்கிறேன். உனக்கு ஒரு மூக்குப் பாத்திரம் எட்டணாவுக்குத் தந்துட்டு கையிலே காசு ரெண்டு ரூபா குடுத்துடறேன்; —சரிதானா?"

"உம். எப்படியாவது குடு.— எங்கே மூக்குப் பாத்திரத்தை எடு பார்க்கலாம்."

மலையன் மூக்குப் பாத்திரம் ஒன்றை எடுத்துச் சிறுமியிடம்

( 4-ம் பக்கம் பார்க்க )

# ஆர்வத்தினிடையே ஆகாமை!

மலர் 20 ] ஆண்டு சந்தா ரூ. 8 (10—9—61) தனிப்பிரதி 16 காசு [ இதழ் 6

'வாய்ச் சொல்லில் வீரரடி கிளியே' என்று பாடினர் பாரதியார். வெறும் பேச்சுப் பேசியே வீரர் ஆகிவிடலாம் என்று எண்ணுகின்றவர்கள் பலரைக் கண்ட பின்னரே அவர்களைப்பற்றிப் பிறர்க்குக் கூறினர் அவர். அந்தப் பேச்சு வீரரின் பரம்பரை இன்னும் இருக்கிறது என்பதை நம் மாநிலத்து நிதியமைச்சர் அடிக்கடி நினைவுறுத்திக் கொண்டிருக்கிறார். தானே அப்படிப்பட்ட வாய்வீச்சு வீரராக விளங்குகின்றார்.

'திட்டத்தில் நிதி ஒதுக்கீடா? இதோ நான் பெற்று வருகிறேன் வேண்டியமட்டும்' என்று விர் எனப் புறப் பட்டுச் செல்லுவதும், வாடிய முகத்தோடு திரும்புவதும் வாடிக்கையாகிவிட்டது. 'என்ன செய்வது' என்று ஏக்கப் பெருமூச்சு விடுவதைப் பலமுறை கேட்டிருக் கிறோம்; பார்த்திருக்கிறோம்.

இந்த வீரரின் சூளுரையை நம்பி நம்பித் தமிழர்கள் ஏமாந்திருக்கின்றனர், பலமுறை. அடுத்தடுத்துப் பல கேடுகள், முன்னேற்றத்தில் தடைகள் தமிழர்க்கும் தமிழகத்திற்கும் ஏற்பட்டிருக்கின்றன.

அண்மையிலே கூடிய முதலமைச்சர்களின் மாநாட்டில், நாட்டின் மொழிகள் அனைத்திற்கும் பொது எழுத்துத் தேவை என்றும், அப்படித் தேவைப்படும் பொது எழுத்து 'தேவநாகரி'யாக இருத்தல் வேண்டும் என்றும் தீர்மானித்தார்கள். இதைக் கேட்ட நல்ல தமிழர்கள் திடுக்கிட்டனர். புலவர்கள், பொதுமக்கள் அனைவரும் புழுங்கினர்; பொருமினர். எழில்மிகு எம் தமிழ் எழுத்துக்களை இழப்பதா என்று கேட்டுக் கொதித் தனர். அப்போது அமைச்சர் சுப்பிரமணியனர் "நான் இருக்கப் பயம் ஏன்" என்று கூறிடுவதுபோல 'நான் பார்த்துக்கொள்ளுகின்றேன் அந்த விஷயத்தை' என்று 'அபயம்' கொடுத்தார். அதற்கான ஆற்றல் அவர்க்கு இருக்கிறது என்று எண்ணிக்கொண்டார் போலும்! ஆனால், நாட்டு நடப்பு அவர்க்கு அத்துணை அதிகாரமோ ஆற்றலோ இல்லை என்பதைப் பன்முறை நமக்குத் தெரிவித்துவிட்டிருக்கிறது.

இந்த நிலையில் அமைச்சர் மீண்டும் தன்னுடைய பேராற்றலைப்பற்றிய பெருமையை விளம்பரப்படுத்திக் கொள்ளும் பணியில் ஈடுபடுகின்றார்.

தமிழ் வளர்ச்சி அடைய நிதி வசதி என்றும்
கிடைக்கும். **அது என் பொறுப்பு**

என்று அண்மையிலே ஒரு நூலின் வெளியீட்டு விழா வில் முழங்கியுள்ளார் அமைச்சர். இந்த 'அபய' மொழிக்குப் பொருள் ஏற்படவேண்டுமானல் இதற்கு முன், அமைச்சர் கூறியது அனைத்தையும் செய்தாக வேண்டும். முன்னரே சொல்லிய பல இன்னமும் கனவு நிலையிலே இருக்க, மேலும் புதிய புதிய வாக் குறுதிகளை—அதுவும் தேர்தல் நேரத்தில்—அளிப்பது என்பது வெறும் கேலிக் கூத்தாகத்தான் அமையும்.

மற்றும், தமிழ் வளர நிதி மட்டும் பயன்படாது. **மதி**யும் தேவை. நல்ல நீதியும் தேவை. இன்று அந்த நியாயம், நடுநிலையான நீதி கிடைத்திருக்கிறதா எனின், மத்திய அரசினர் இந்தி ஒன்றே மொழி என் றும், பிறவெல்லாம் பிதற்றல் ஒலிகள் என்றும் கருதும் போக்குத்தான் இருக்கிறது. இந்நிலையில் அமைச் சரின் வாக்குறுதியினால் மட்டும் தமிழ் வாழ்ந்துவிட முடியாது என்பதை அமைச்சர் பெருமகனாரின் கவ னத்திற்குக் கொண்டுவருவது நம்முடைய கடமை யாகிறது.

அமைச்சருக்கு, உண்மையாகவே தமிழ்மொழிக் கும், தமிழ் மக்களுக்கும், நல்லன செய்யவேண்டு மென்ற ஆசை இருக்கலாம். அதனை நாமும் மறுக்க வில்லை. அப்படி இருந்தால், அதனை மறைக்கவும் விரும்ப வில்லை.

ஆனால், அவரது ஆசைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்மையிலேயே அவருக்கு இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்கும்போதுதான், அவரென்ன செய்வார் பாவம்! அவரை ஆட்டிப்படைப்பவர்கள் வெகுதொலைவில் இருக்கிறார்கள்; அவர்களது அலட்சி யப் பார்வை ஒன்றே அவரது ஆசைகளை நிறைவேற்ற முடியாதபடி செய்துவிடும் நிலை இருக்கும்போது, அவ ரது வாக்குறுதிகளை இங்குள்ள மக்கள் எப்படி நம்ப முடியும்?

எனவேதான், நம்முடைய சொந்தக் காலில் நாம் நிற்கவேண்டும். அப்பொழுதுதான், நாம், நம்மை விழாமல் பார்த்துக்கொள்ளமுடியும் என்று கூறுகின் றோம். இது அமைச்சருக்கும் அவரைச் சார்ந்தோருக் கும் கசப்பாகத் தோன்றுகிறது.

இந்தக் கசப்பு இனிக்க வேண்டும்; இனிக்கச் செய் யும் முயற்சிதான் நம்முடையது. இந்த முயற்சிக்கு அமைச்சரும் அவரைச் சார்ந்தோரும் ஒத்துழைக்கா விட்டாலும். இதனை—இந்த அருமையான முயற்சியினை எதிர்க்காமலாவது இருக்கிறார்களா என்று பார்த்தால், இதனை எதிர்ப்பதுதான் தங்களுடைய முதல் வேலை— முழுவேலை என்ற போக்கில் நடந்துகொள்கின்றனர்.

அதே சமயத்தில், தமிழ்—தமிழ் மக்கள் என்று கூறப்படும்போது—தமிழ் அழிக்கப்படுகிறது — தமிழ் மக்கள் அவதிப்படுத்தப்படுகிறார்கள் என்று நாம் கூறும்போது,

"உங்களுக்கேன் அந்தக் கவலை.
அதனை என் பொறுப்பில் விட்டுவிடுங்கள்
நான் பார்த்துக் கொள்கிறேன்"

என்று வீர உரை ஆற்ற முன் வருகிறார். அவருடைய ஆர்வத்தைப் பாராட்டுகிறோம்.

அதே சமயத்தில் அவருடைய ஆகாமையைக் கண்டு பரிதாபப்படுகிறோம்.

இந்த நிலை மாறவேண்டுமென்பதே எம்முடைய உண்மையான நோக்கமாகும். இதனை அமைச்சர் அவர்களும் அவரைச் சார்ந்தோரும் உணர வேண்டுகிறோம்.

★

# இராசபாதர்

அடுத்தடுத்து ஏற்பட்ட துயரச் செய்திகளை மறக்க முடியாத நிலையில் இருந்து வருந்திக்கொண்டிருக்கும் போதே, இதோ மீண்டும் ஒரு துயரச்செய்தி என்றால், அதனை எப்படித் தாங்கிக்கொள்வது?

நமது அலுவலகத்தில் நீண்டகாலமாகப் பணி புரிந்து வந்தவரும், பின்னர் தமிழ்நாடு தலைநகரில் "ஓம்லண்டு" ஆங்கில இதழின் அலுவலகத்தில் பணி புரிந்து வந்தவரும், கடைசியாக "முரசொலி"ப் பணிமனையில் அலுவலாற்றியவரும் நமது உள்ளத்தில் என்றென்றும் உள்ளவருமான இராசபாதர் அவர்கள் திடீரென்று மாரடைப்பு நோயால் பீடிக்கப்பட்டு இயற்கை எய்திவிட்டார் என்ற துயரமிக்க செய்தி எம்மை எல்லாம் கலங்கவைத்துவிட்டது.

மறைந்த இராசபாதர் எல்லாருடனும் நல்லமுறையில் பழகும் பண்பினைப் பெற்றவர். பிறருக்கு நல்லவராக வாழ்ந்த அவருக்கு, தன்னுடைய வாழ்வில் நல்லதொரு நிலையினைப் பெற்றுச் சிறப்புடன் வாழவேண்டுமென்ற விருப்பம் நிறைவேறமுடியாதபடி அடிக்கடி தொல்லைகளாலும் துயரத்தாலும் தாக்கப்பட்டு, அவற்றிலிருந்து விடுபடுவதற்குள், எப்படியோ இன்னொரு தொல்லை அவரை வந்தடைவது சிலகாலமாகவே அவருக்கு ஏற்பட்டுவிட்டது.

அண்மையில்தான், அவரது உடன்பிறந்தாரான இராசரத்தினம் அவர்கள் இயற்கை எய்தி, அதனால், அவர் பெரிதும் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கும் போதே, திடீரென்று இயற்கை அவரைத் தனதாக்கிக் கொண்டுவிட்டது.

அவரது பிரிவு அவரது குடும்பத்துக்குப் பேரிழப்பாகும். தனது குடும்பத்தலைவனைப் பிரிந்துவாழும் அவரது துணைவியார் பேபி அம்மாளுக்கும் அவரது ஒரே அன்புச்செல்வி வளர்மதிக்கும் மற்றும் அவரது உறவினர் நண்பர்கட்கும் நமது ஆறுதல்மொழிகளை உரித்தாக்குகிறோம்.

❋

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

கொடுத்துவிட்டு, எவர் சில்வர் குவளையைக் கையில் வாங்கினான். பிறகு சட்டைப் பையைத் தடவினான் சில்லறை எடுப்பதற்கு.

சட்டைப் பையில் ஒன்றரை ரூபாய்தான் இருந்தது. காலையிலிருந்து அவன் வியாபாரம் அவ்வளவுதான். காலையில் நாலு இட்டலியும் ஒரு டீயும் சாப்பிட்டதோடு, இடையில் நாலைந்து தடவை வழியில் தென்பட்ட ஓட்டல்களில் நுழைந்து, நுழைந்து வெறும் தண்ணீர் வாங்கிக் குடித்திருக்கிறான். இப்போது திரும்பவும் பசி வயிற்றைக் கிள்ளிக்கொண்டிருக்கின்றது. ஏதாவது போட்டுக்கொள்ள வேண்டும். பழமோ, ரொட்டியோ, முடிந்தால் சாப்பாடோ சாப்பிட வேண்டும். அதற்கு வேறு சில்லறை வேண்டும். பிறகு, இராத்திரி இருக்கின்றது. வீட்டிற்கு ஏதாவது கொடுக்கவேண்டும். மாலையில் வியாபாரம் எப்படியோ! துட்டுக் கிடைக்குமோ, என்னவோ!' அவன் யோசித்தான். திரும்பவும் சட்டைப் பையைத் துழாவினான். சில்லறையை எண்ணிப் பார்த்தான், அதே ஒன்றரை ரூபாய்தான். குறையவும் இல்லை; கூடவும் இல்லை. திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்ததில், அந்த ஒன்றரை ரூபாய்ச் சில்லறையில் ஒரு அணா நன்றாகத் தேய்ந்துபோய் 'நான் செல்லுபடியாகமாட்டேன்' என்று பல்லிளித்துச் சொல்லியதைத்தான் அவன் பலனாகக் கண்டான்.

'சரி, வேறு வழியில்லை. ஒன்று எவர் சில்வர் குவளையைத் திரும்பக் கொடுத்துவிட்டு, மூக்குப் பாத்திரத்தை வாங்கிக் கொள்ளவேண்டும், அல்லது இந்தக் குழந்தை விரும்பினால் மற்றுமொரு மூக்குப் பாத்திரத்தை அதனிடம் கொடுத்து, அதோடு ஒன்றரை ரூபாய்ச் சில்லறையையும் கொடுக்கவேண்டும். அப்படியே ஒன்றரை ரூபாயைக் கொடுத்துவிட்டால், பசிக்கு ஏதாவது போட்டுக்கொள்வது எப்படி?– உம்'—பெருமூச்சோடு அவன் யோசித்தான்.

"சரி பாப்பா, என்னிடம் பணம் குறைவாக இருக்கிறது. இதோ, நீ கொடுத்த டம்ளரை வாங்கிக் கொள்ளம்மா!" என்று பாத்திரக் கூடையின் பக்கம் திரும்பியபடியே குவளையை எடுத்துப் பின் பக்கமாக நீட்டினான். குழந்தையிடமிருந்து பதில் கிடைக்கவில்லை.

"பாப்பா, நான் சொல்வது புரியுதா?" என்று வினவிய வண்ணம் பின்னால் திரும்பினான்.

"அட!"—அவன் வியப்புற்று நின்றான். குழந்தை அங்கு இல்லை. கண்ணுக்கெட்டிய தூரம் வரை அவள் தென்படவில்லை.

"சில்லறை வாங்காமல் குழந்தை போய்விட்டதே! அட சங்கடமே! அந்தக் குழந்தை எந்த வீட்டுக் குழந்தையோ? எங்கிருந்து வந்ததோ? எந்தப் பக்கம் போயிற்றோ? தெரியவில்லையே! என்ன செய்வது இதற்கு? எங்கே போய்த் தேடிப் பிடிப்பது? அந்தக் குழந்தையின் பெற்றோர் இதை அறிந்தால் எப்படி எடுத்துக்கொள்வார்களோ! — இது பெரிய தொல்லையாகத், துன்பமாக முடிந்தாலும் முடிந்துவிடுமே! இப்போது என்ன செய்யலாம்!—சரி, ஒவ்வொரு வீடாகப் போய்த் தேடிப் பார்த்துவிடலாம். — பசிவேளையில் இதுவேறு தொல்லையா!' என்று அங்கலாய்த்துக்கொண்டு, பாத்திரக் கூடையைத் தலையில் தூக்கிவைத்துக்கொண்டான் அவன். விரைந்து, வீடுகள் வரிசையாகத் தென்பட்ட பக்கம் சென்றான். "பாத்திரம் வாங்கலியா பாத்திரம்! ஈயப்பாத்திரம், அலுமினியப் பாத்திரம்! பாத்திரம் வாங்கலியா, பாத்திரம்!" உரத்துக் கூவிக்கொண்டே நடந்தான். ஒலி உரக்குமாறு நீட்டி, இழுத்து, முழக்கியபடிகூவிக்கொண்டே சென்றான்.

( 13-ம் பக்கம் பார்க்க )

காஞ்சீபுரம்

10-9-'61.

தம்பி!

சென்ற கிழமை, தொட்டிலில் படுத்துத் துயிலும் தன் மகவு குறித்துத் தாய் காணும் கனவு பற்றி எழுதியிருந்தேன்; மேலும் எழுதுவதாகவும் வாக்களித்திருந்தேன்.

உனக்குக் கடிதம் எழுதி முடித்த பிறகு தொடங்கிய சுற்றுப்பயணம், சற்றுக் கடுமையானது, தம்பி, ஆனால், தவிர்க்கவே முடியாத, தவிர்க்கக்கூடாத நிகழ்ச்சிகள்; எனவே, இந்தக் கிழமை உனக்குக் கடிதம் எழுதத் தொடங்கும்போது உள்ளபடி அலுப்புத்தான் — ஆயினும் அதைப் போக்கிக்கொள்ளக்கூட உன்னுடன் உரையாடுவது மெத்தப் பயன்படும் மாமருந்தல்லவா!!

ஒவ்வொருவருக்கு, அவ்வப்போது ஏற்படும் நினைவுகளேகூடச் சிறிது போதில் கலைந்தும், சிதறியும், சிதைந்தும், குறைந்தும் போய்விடுகிறது, அறிவாய்.

என்னமோ நினைத்தேன்—மறந்துவிட்டேன்......என்று பேசுவது கேட்டிருப்பாய். நன்றாகக் கவனப்படுத்திச் சொல்லு — ஒன்றுக்கு மற்றொன்று சொல்லிவிடாதே! நினைவுபடுத்திக்கொண்டு சொல்லு — என்று மற்றவர்கள் கூறுவதும் கேட்டிருப்பாய்.

நேற்று நடந்தது, 'இன்று அவனுக்கு நினைவிலிருக்காதே! அவ்வளவு' தெளிவு!!— என்றும்,

அவனுக்கு அதெல்லாமா நினைவிலே இருக்கும்-பெரிய ஆள் அல்லவா-எத்தனையோ வேலை—இந்தச் சாதாரண விஷயமா நினைவிலே இருக்கும்—என்றும்,

உனக்கு எங்கே அப்பா, இதெல்லாம் இப்போது நினைவிலே இருக்கப் போகிறது — காலம் மாறிவிட்டதல்லவா, உன் நிலையும் மாறிவிட்டது, நினைப்பும் மாறிவிட்டது — என்றும்,

கேலியாகவும், கோபத்துடனும், இடித்துரைக்கும் போக்கிலும் ஒருவரைப்பற்றி அவருடன் தொடர்புகொண்ட மற்றவர் பேசுவது, கேட்டிருப்பாய்.

நினைவு என்பதே, பல்வேறு காரணங்களாலே கலைந்தும் குலைந்தும், சிதைந்தும் சிதறியும் போவதுண்டு.

# பட்டப் பகலில்.....!

(2)

அப்பாவித்தனம், அகம்பாவம், தொல்லைகள், நிலைமையில் மாற்றம், இவைபோன்ற காரணங்களால், நினைவு மாறிவிடுவதுண்டு.

சிலர், வேண்டுமென்றே, நினைவு இல்லாததுபோல, நடிப்பதுண்டு—தமது வசதிக்காக!

சிலர், எதிலேயும்,தாம் பற்றற்றவர்கள் என்பதைக் காட்டிக் கொள்ளவேண்டியேகூட, எதுவும் தமது நினைவிலே தங்குவது இல்லை, என்று கூறி, அப்படிக் கூறிக் கொள்வதிலேயும் பெருமை இருப்பதாக எண்ணிக் கொள்வதுண்டு.

தலையைச் சொரிந்துகொள்வது — நெற்றியைத் தடவிக்கொள்வது—புருவத்தை நெரித்துக்கொள்வது—இப்படி எல்லாம், செய்வர், நினைவிலே இருந்து கலைந்துவிட்ட எண்ணத்தை மீண்டும் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டுவர!

ஒருநாள், மரப்பொந்து ஒன்றிலே குடியிருந்துவந்த சிறு பறவையின் குஞ்சு, கீழே, தவறி வீழ்ந்துவிட்டது; பல ஆண்டுகளுக்கு முன்பு. என் கரத்தில் சிக்கிற்று. கொள்ளை ஆசை எனக்கு, அதனை வளர்க்கவேண்டும் என்று. என்னதான் ஆசையுடன் நான் இருப்பினும், அதன் தாயன்பு அதற்கு என்னிடம் கிடைக்குமா? கிடைக்காது! கிடைக்காது! உன்னால் முடியாது! நீ, பழம்தருவாய், பால் ஊற்றித் தருவாய்! வேளையறியாமல், என் விருப்பம் தெரியாமல்! ஆனால், என் தாயின் அரவணைப்பிலே எனக்குக் கிடைக்கும் 'கதகதப்பு' இருக்கிறதே, அது அல்லவா, எனக்குப் பேரின்பம் ஊட்டி வளர்க்கிறது! உன்னிடம் ஏது, அந்தக் 'கதகதப்பு' அளிக்கும் வல்லமை! நீயோ, மனித இனம்—வேட்டைக்கார ஜாதி! நானோ, பறவை இனம்—உன் பிடியில் சிக்காமல், தயவு நாடாமல், வானத்தில் வட்டமிடும், வானம்பாடி! என்னை விட்டுவிடு! என் இச்சையாக நான் சிறகடித்துப் பறந்திடுவேன்—சிந்துகளும் பாடிடுவேன்! தொலைவிலே இருந்து கேட்டு இன்பம் பெறு — அதற்காக எனக்கொன்றும் தரவேண்டாம்!! தாயன்பு பெறுவதைத் தடுத்திடாதே, விட்டுவிடு!—என்றெல்லாம், பேசுவதுபோலக் குருவிக்குஞ்சு கிறீச்சிடுகிறது—அதனாலேயே அலுத்தும் போகிறது; தன் வலிவற்ற மூக்கினால் என் விரலைக் கொத்துகிறது; வலிதாள மாட்டாமல் துவண்டுபோகிறது!

தம்பி! இந்த நிலையில், வேறு மரம் சென்றிருந்த தாய்ப்பறவை வந்தது; சரேலெனப் பொந்து நுழைந்தது; அடுத்த கணம், கிறீச்சிட்டபடி வெளியே வந்தது, கிளையின் அருகே சுற்றிச் சுற்றி வட்டமிட்டது; இங்கும் அங்கும் தேடுகிறது, பாடும் பறவை! மீண்டும் கூட்டுக்குள் போய்ப் பார்க்கிறது, வெளியே வருகிறது, வேதனையும் கோபமும் கலந்த குரலில் கூவுகிறது.

நாடகம் தீட்டுவோர், சேயினைக் காணாது தவிக்கும் தாய், என்னென்ன விதமாகத் தத்தளிப்பாள், ஏதேது கூறிக் கதறுவாள், என்னென்ன விதமாகக் கூவி அழைப்பாள், எங்கெங்கு தேடிடுவாள், எவரெவரைக் கேட்டிடுவாள், என்பதுபற்றி அழகுறத் தீட்டுவர்—பார்த்திருக்கிறோம்—இந்தப் பாடும் பறவையின் பரதவிப்பினை, எத்துணை திறம் படைத்த நூலாசிரியராலும், அப்படியே சித்தரித்தளிக்க முடியாது. கண்டால் மட்டுமே விளங்கும், கூறக் கேட்கும்போது, மிகைபடச் சொல்வதாகக்கூடத் தோன்றும்.

தம்பி! எனக்குச் சிறிதளவு அச்சமேகூட ஏற்பட்டுவிட்டது போயேன்! அந்தக் குருவி, என் உள்ளங்கையில், தன் இன்பம், சிறைபட்டு இருப்பது அறிந்து, எங்கே, என் கண்களைக் கொத்திவிடுகிறதோ என்று பயந்தேன்.

மற்றொன்று கேள், தம்பி! பறக்கக்கூடத் தெரியாத அந்தக் குஞ்சு, என் பரிவு, பச்சாதாப உணர்ச்சியினைப் பெற்ற அந்தக் குருவிக்குஞ்சு, தாய்க் குருவியின் குரல் கேட்டு, அச்சத்தையும் அலுப்பினையும் மறந்து, குரல் கொடுக்கிறது!! ஆமாம், தம்பி! தன்னைத் தாய் தேடுகிறாள் என்பதறிந்து, "இதோ! இதோ இருக்கிறேன்! இவனிடம் சிறைபட்டுக் கிடக்கிறேன்!" என்று தெரிவிக்கிறது.

விட்டுவிட்டு, மாறிமாறி இருகுரல்கள்! பாசத்துடன் தேடும் பாடும் பறவையின் அழைப்புக்குரல்!! பரிவுடன், பதில் அளிக்கும் குரல்!!

கோபந்தான் எனக்கு—ஒரு சின்னஞ்சிறு குருவி, மரப்பொந்து வாழும் தாய்க் குருவிக்காக, இத்தனை கத்துக்கத்துவதா!! நம்மை அவ்வளவு துச்சமாக மதிக்கிறது!—என்று எண்ணினேன். உள்ளங்கையிலிருந்து அதனை விடுத்தேன் — தத்தித்தத்தி நடந்தது—தாய்க் குருவி கண்டுவிட்டது—தம்பி! நல்ல இசை நிகழ்ச்சியின் போது, 'பக்கவாத்யக்காரர்களின்' 'வாசிப்பை'க் கேட்டிருக்கிறாயல்லவா? இவரா? அவரா? மிருதங்கமா? கஞ்சிராவா? எவருடைய வாசிப்பிலே, நயமும் லயமும், மிடுக்கும் எடுப்பும், மிகுந்து காணப்படுகிறது என்று மன்றத்துள்ளோர், வியந்து எண்ணியபடி இருப்பர்! இறுதிக் கட்டத்தில், இருவரும் ஒன்றாக இணைந்துவிடுவர், ஒலிகள் இழைந்துவிடும், இனிமை மிகுந்துவிடும்! அதேபோல, இங்கு, தாய்க் குருவியின் குரல், குஞ்சு எழுப்பும் குரலோசை, நிந்தி நிந்தி நிங்கின்னி,தத்த தத்த தததத்த, இந்த ஒலிகளின் இனிமைபோல, இரு குரலிசை, மாறிமாறி, விட்டுவிட்டுப் பிறகு இணைந்து, இழைந்து ஒரே இனிமையாகிவிட்ட நிலை; அழைத்துக் கொண்டே போய்விட்டது தாய்க் குருவி, குஞ்சினை! பொந்துக்குள்ளே, தாயும் சேயும்! கதகதப்பு! மகிழ்ச்சி

மிக்க கிறீச்சொலி! எனக்கே, கோபம் மாறி, மகிழ்ச்சி பிறந்தது!! இயற்கையாக இருக்கவேண்டிய நிலை இது!! —என்று எண்ணினேன்—இந்த நிலை கெட்டல்லவா போயிருக்கும், அந்தக் குருவிக்குஞ்சினை நாம் கூண்டிலிட்டு வளர்த்தால், என்றுகூடத் தோன்றிற்று,

தம்பி! பல ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சி; இப்போது, ஏன் என் நினைவிற்கு வந்தது? நினைவு எப்படியெப்படிச் சிதையும், கலையும், மீண்டும் அதனைத் தேடிப்பெற என்னென்ன செயல் வேண்டும் என்று எண்ணியபோது, பொந்திலிருந்து தவறிப்போன குஞ்சுதனைத் தேடித் தாய்ப்பறவை தத்தளித்த நிகழ்ச்சி நினைவிற்கு வத்தது.

நமது நினைவு, சிதறிப்போய், மீண்டும் அதனைத் தேடிப் பெறுவதுகூட, இதுபோலத்தான். தத்தளிப்பு! தவிப்பு! அழைப்பு! கண்டுபிடிப்பு! களிப்பு! திரும்பப் பெறுவது! முழு மகிழ்ச்சி!!

"அப்பாடா! இப்போதுதான் நினைவிற்கு வந்தது!!"— என்று வெற்றிக் களிப்புப் பொங்கிடும் நிலையில் பேசுகிறோமல்லவா சில வேளைகளில் — இது தான் தம்பி! தாய்க் குருவியும் அதன் குஞ்சும் ஒன்றாகச் சேர்ந்துவிட்டன!!—என்று பொருள்.

பேழைக்குள் போட்டு வைத்திருக்கும் பல பொருள்களுக்கிடையிலே, சிக்கிக்கொள்ளும் ஏதேனும் ஒரு பொருளைத் தேடும்போது, எப்படி இருக்கிறது நிலைமை! அதேதான்!! பல விஷயங்கள் நினைவிலே இருக்கும், ஏதோ ஒன்றுமட்டும் நினைவிலிருக்காது—அடே அப்பா! —அதை மீண்டும் நினைவிலே கொண்டுவர, என்ன பாடு படவேண்டியிருக்கும் தெரியுமா? ஆனால், தம்பி! சிதறியது கிடைத்துவிட்டால், நினைவிலிருந்து விலகியது மீண்டும் நினைவிற்கு வந்துவிட்டால், எத்துணை களிப்பு, என்கிறாய்!! ஏதேனும் ஒரு அலுவலிலே, பொருளிலே, எண்ணத்திலே, நாம் நம்மை மிகுதியும் ஈடுபடுத்திக்கொண்டு விடுவோமானால், அதிலேயே, நமது நினைவு முழுவதும் இணைந்துபோய் விடுமானால், வேறு பல விஷயங்களிலே நமக்கு நினைவுக் குறைவு மிகுதியாக ஏற்பட்டுவிடும்.

ஏதோ நினைப்பிலே, இதனை மறந்துவிட்டேன்!—என்று பலர் பேசக் கேட்டிருக்கிறாய், அல்லவா?

நீண்ட நாட்களாகத், தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற கணவன், வீடு திரும்பும் சேதி கேட்டால், துணைவிக்கு அந்த ஒரு நினைப்பே மிகுதியாகிவிடும்— வேறு எதுவும் நினைவிலே இராது, என்பர் புலவர். கழுத்தணியைத் தலையிலிட்டும், சூடவேண்டியதைச் சொருகியும், சொருகவேண்டியதைச் சூடியும், அஞ்சனத்தைப் புருவத்துக்கிட மறந்தும் போவராம் மாதர்.

காதலால் கட்டுண்டுகிடப்போர் அப்படித்தான்— நினைவு தடுமாறியிருப்பர், என்று எண்ணிவிடாதே, தம்பி! எந்த ஒரு உணர்ச்சி மேலிட்டு, நாம் அதன் வயப்பட்டுப் போய்விட்டாலும், இதே நிலைதான்!

பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர்—உடற்கூறு பற்றிய நுண்ணறிவுமிக்கவர். ஒருநாள், மாணவர்கட்கு, தவளையின் உடற்கூறு எவ்விதம் உளது என்பதுபற்றிய பாடம் நடத்த எண்ணிப் பெரிய தவளையொன்றினைக் காகிதத்தில் சுற்றித் தம் சட்டைப்பையில் திணித்துக்கொண்டார். உணவு உட்கொள்ளக்கூட நேரமில்லை போகிற வழியிலேயே தின்றுகொள்ளலாம் என்று, ரொட்டித்துண்டு ஒன்றினை வேறோர் காகிதத்தில் வைத்து எடுத்துக்கொண்டார், வழிநடந்தார்.

தவளையின் உடலைக் கீறிக்காட்டி, அமைப்பு உள்ள விதம்பற்றி விளக்கம் அளித்து, மாணவர்க்கு நல்லறிவு புகட்ட வேண்டுமென்பதுபற்றிய எண்ணமே மேலிட்டிருந்தது; அந்த எண்ணம் அவரை ஆட்கொண்டுவிட்டது.

வகுப்பறை சென்றார்; மாணவர்களை அழைத்து, "மாணவர்களே! இன்று, தவளையின் உடற்கூறுபற்றிய பாடம்! தவளையின் உடலமைப்பு எப்படி இருக்கிறது என்பதைக்காட்ட, இதோ ஒரு தவளை கொண்டுவந்திருக்கிறேன்" என்று கூறியபடி, பொட்டலத்தை எடுத்து மேஜைமீதுவைத்துப் பிரித்தார்; ரொட்டித்துண்டு இருந்தது; திகைத்தார்; சட்டையின் மற்றப் பையைத் துழாவினார்—ஏதும் இல்லை!!

"நன்றாக நினைவிருக்கிறதே! தவளையைக் காகிதத்தில் சுற்றிச் சட்டைப்பையிலே, வைத்தநினைவு தெளிவாக இருக்கிறதே! காணோமே!" என்று கூறித் திகைக்கிறார்.

தவளையைக் காகிதத்திலே சுற்றிச் சட்டைப் பையிலே, வைத்த நினைவு பழுதுபடவில்லை; நினைவு, சரியாகவே இருக்கிறது.

அந்த நினைவுமட்டுமே அவரிடம்!

தவளையை இப்படி இப்படிக் கீறிக்காட்டவேண்டும்; அதன் உடலமைப்புப்பற்றி இன்னின்ன விளக்கம் அளிக்கவேண்டும் என்ற எண்ணமே, அவர் மனதில்; வேறு நினைவு இல்லை! என்ன செய்கிறோம் என்ற நினைவுகூட இல்லை!! அவ்வளவு இரண்டறக் கலந்துவிட்டார், தவளைபற்றிய பாடத்தை மாணவர்க்குக் கூறவேண்டும் என்ற நினைப்பில், அதனால், வருகிறவழியில், என்ன செய்கிறோம் என்ற நினைவுகொள்ளாமல், பொட்டலத்தைப் பிரித்து, ரொட்டித்துண்டு என்று எண்ணிக்கொண்டு, பாவம், தவளையையே மென்று தின்றுவிட்டார்!!

தம்பி! நல்லவர்! எனினும் இப்பேராசிரியர், ஏதோ ஒரு நினைப்புக்கே தம்மை முழுக்க முழுக்க ஒப்படைத்து

விட்டுக் கவனிக்கப்படவேண்டிய, வேறு விஷயங்களைப் பற்றிய நினைப்பே இல்லாது போனூர்; இந்த விபரீதம் ஏற்பட்டது.

ஒருபொருளில் அல்லது எண்ணத்திலே, நம்மைப் பிணைத்துக்கொள்வதிலேகூட ஏற்பட்டுவிடக்கூடிய, கெடுதல் குறித்து விளக்கத் தவளை தின்ற பேராசிரியர் கதையைக் கூறுவர்.

நினைவிலே நிற்பது, எத்துணை வலிவுமிக்க ஆதிக்கம் செலுத்துகிறது, என்ற பாடமும் இதிலிருந்து பெற இயலும்.

ஒன்றில் மனம் ஈடுபட்டுவிட்டால், மற்றதெல்லாம், நினைவிலே தங்காது என்பதற்கும், இஃது ஓர் எடுத்துக் காட்டு.

ஒன்றுகூட நினைவிலிருந்து தவறிவிடவே செய்யாது! ஒவ்வொரு விஷயமும், தகவலும், விவரமும், இவருக்கு நினைவிலிருக்கும், என்று சிலர்பற்றிச் சொல்வார்கள். அவ்வளவு நினைவுத்திறமைகொண்டவர், என்பர்.

சிலர், உள்ளபடி, நினைவுத்திறமை மிகுதியும் உடையவர்களாகவும், அந்தத் திறமையை வளமாக வைத்திருப்போராகவும், இருக்கிறூர்கள்.

அந்தத் திறமையினைச் செம்மையாக வைத்துக் கொள்வதை ஒரு கலையாகவே கொள்கின்றனர்.

தம்பி! வேறு சிலர் உளர்; எதையும் மறவாமல், நினைவிலே பதியவைத்துக்கொள்ளும் திறமை தம்மிடம் இருப்பதனுல், தாம் மற்ற எல்லாத் துறைகளிலுமே திறமைமிக்கவர், என்று கூறுபவர்; மற்றவர்களையும், அதனை ஏற்றுக்கொள்ளச் செய்பவர்.

எதனையும் நினைவிலேகொள்பவர்; நினைவு தவருதவர்; என்ற அந்த ஒரு திறமையினைக்கொண்டே மற்றவர்களை மிரட்ட முனைபவர்களும் உண்டு.

ஜெர்மன்நாட்டு அதிபராகி உலகை உருட்டி மிரட்டிய ஹிட்லர் அப்படிப்பட்டவரென ஒரு நூலாசிரியர் கூறுகிறூர்.

**எல்லாம் தமக்குத் தெரியும்!**
**எல்லாம் தமக்குமட்டுமே தெரியும்!**

என்று கூறுபவர், ஹிட்லர்; பிறரும் அதனை நம்பும்படி அவருடைய பல நடவடிக்கைகள் இருக்குமாம்.

ஹிட்லரைக் காட்டிலும் போர்த்திறன் மிக்கவர்கள், போர்முறை கற்றறிந்தவர்கள், போர்ப் பயிற்சி பெற்றவர்கள், பலர் இருந்தனர், அவரைச் சூழ்ந்தபடி.

அவர்களே வியந்து பாராட்டும்படி, அச்சப்படும்படி, அவர்களின் துறைகள் பற்றிய நுணுக்கங்களை, அவர்கள் கேட்டு வெட்கும்படி, ஹிட்லர், மளமளவென்று பேசுவார், கேள்விகள் கேட்பார், திருத்தங்கள் தருவார், திகைக்கவைப்பார்!! எடுத்துக்காட்டுக்கு இது:

*இன்ன நாட்டின் பேரில் இந்த மாதம் இத்தனையாம் நாள் படையெடுத்துச் செல்லவேண்டும்—டாங்கிப் படைகளை அனுப்பவேண்டும்*

என்று ஹிட்லர் உத்தரவு பிறப்பிப்பார். டாங்கிப்படைப் பிரிவின் தலைவன், அந்த நேரம் படை எடுப்புக்கு ஏற்றது அல்ல என்ற எண்ணம் கொண்டவர்.

அவர் போர் பல நடாத்தியவர்! களம் பல கண்டவர்!!

ஹிட்லரைக் கண்டு தமது கருத்தை அறிவிக்க வருகிறூர்.

ஹிட்லரிடம் முறையிடுகிறூர்; படை எடுப்புக்கு இது ஏற்ற நேரம் அல்ல, என்பதற்கான காரணங்களைக் கூற மனதிலே அவைகளைத் தொகுத்துத் தம்மைத் தயாரித்துக்கொள்கிறூர்.

ஹிட்லர், அந்தப் படைப் பிரிவின் தலைவனிடம், முடுக்காகப் பேச்சைத் துவக்குகிறுன்.

*டாங்கிப் படைப் பிரிவின் தலைவன், நீ?*

*ஆம்! வழிபாட்டுக்குரிய தலைவரே!*

*இப்போது உன் வசம் உள்ள டாங்கிகள், எத்தனை?*

*ஆயிரத்து நானூறு!*

*பழுதானவை?*

*சில, டாங்கிகள்..........*

*அதாவது, உனக்கு அந்தக் கணக்குத் தெரியாது?*

*கவனிக்கவில்லை. குறிப்பு எடுத்துக்கொண்டு வரவில்லை..........*

*சரி! பெட்ரோல், எவ்வளவு இருக்கிறது?*

*போதுமான அளவு..........*

*போதுமான அளவு என்ருல்? எதற்குப் போதுமான அளவு! உம்! பெட்ரோல், எவ்வளவு இருக்கிறது என்பது, உனக்குத் திட்டவட்டமாகத் தெரியாது..........*

*மன்னிக்க வேண்டுகிறேன்........*

டாங்கிப் படையினரில், இப்போது நோய்வாய்ப்பட்டிருப்போர் எத்தனை பேர், என்று தெரியுமா?

மருத்துவப் பிரிவினருக்குத் தான், அந்தத் தகவல் தெரியும்........

உனக்குத் தெரியாது?

ஆம்! அதிபரே!

உன்னிடம் உள்ள டாங்க்கியின் உருளை, எத்தனை டன் எடை? தெரியாது!

தெரியாது!!

டாங்கி ஓட்டுபவர்களின் சட்டையில், எத்தனை பொத்தான்கள்?

தெரியாது............

சட்டை என்ன நிறம்?

பழுப்பு நிறமாக........

முன்பு! இப்போது, நிறம் மாற்றப்பட்டது — உத்தரவு பிறந்திருக்கிறது. உனக்குத் தெரியவில்லை. சட்டையிலே உள்ள பொத்தான்கள் 13. உனக்குத் தெரியவில்லை. டாங்கியின் உருளை, மூன்று டன்! உனக்குத் தெரியாது. நோய்வாய்ப்பட்டுள்ள டாங்கி ஓட்டுபவர்கள் 77! உனக்குத் தெரியாது. பெட்ரேல் மூன்று இலட்சம் காலன் இருக்கிறது! உனக்குத் தெரியாது! பழுதாகியுள்ள டாங்கிகள் பதினறு. உனக்குத் தெரியாது! நீ, டாங்க்கிப் படைப் பிரிவின் தலைவன் — உனக்கு, நீ தொடர்பு கொண்டுள்ள துறையிலே தெரிந்திருக்க வேண்டிய இவ்வளவு தகவல்கள் தெரியவில்லை! அப்படிப்பட்ட நீ, உனக்குத் தெரியாததை எல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டுள்ள எனக்குப் புத்திகூற வருகிறாய், துணிவாக! படை எடுப்புக்கு இது ஏற்ற சமயம் அல்ல, என்று!! உன் மேற்பார்வையிலே இருப்பதுபற்றியே உனக்குத் தெரியவில்லை! நான், கூறவேண்டி இருக்கிறது! நீ, போர்முறை பற்றி எனக்குப் புத்திமதிகூறத் துணிவு கொண்டுவிட்டாய்........

மன்னிக்க வேண்டும்; முற்றுமுணர்ந்த மூலவனே! எங்கு இருப்பதும், நடப்பதும், இருந்த இடமிருந்தே, அறிந்துகொள்ளும் ஆற்றலரசே! என் அகந்தையை அழித்தீர்! அறிவு புகட்டினீர்! வாழ்க அதிபர்! வாழ்க அரசு! வருகிறேன், தலைவா!

சென்றுவா! எதிரியைக் கொன்று குவித்துவிட்டுவா!!

தம்பி! டாங்கிப்படைப் பிரிவுத் தலைவனே, கேட்டு மலைத்துப் போகும்படியான 'தகவல்களை' ஹிட்லர், அறிந்திருந்தது எப்படி, தெரியுமா?

டாங்கிப்படைத் பிரிவுத் தலைவன் தன்னைக் காண வருகிருன் என்று தெரிந்ததும், தன்னிடம் உள்ள தகவல் சேகரிப்புத் துறையினனைக் கொண்டு, ஒரு படைத் தலைவன், சாதாரணமாகக் கவனிக்கத்தக்கவை அல்ல என்று ஒதுக்கிவிட்டிருக்கக்கூடிய விவரங்களைக் கொண்டுவரச் செய்து, அவைகளைக் கொட்டிக்காட்டி, படைத்தலைவனைத் திணற அடிப்பது, ஹிட்லர் முறை!!

இந்த விவரங்கள், படைத்தலைவனுடைய நினைவிலே இருக்கத் தேவைகூட இல்லை; இருக்காது; இந்த விவரங்களைப் பற்றிய நினைப்பிலே அவன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுவிட்டால், மிக முக்கியமான, முடிவெடுக்கத் தக்க நுண்ணறிவு பெற நேரம்கூடக் கிடைக்காது. எனவேதான், பழுதான டாங்கிகளின் எண்ணிக்கை, சட்டையில் உள்ள பொத்தான்களின் எண்ணிக்கை, உள்ள பெட்ரோலின் அளவு போன்றவைகள் அவன் நினைவில் இல்லை. ஹிட்லர், இவைகளைப்பற்றிக் கேட்கக் கூடும்என்று அவன் எதிர்பார்த்திருக்கக்கூடமாட்டான்; வேறு முக்கியமான பிரச்சினைகள் குறிந்துப் பேசுவார்; எதிரி நாட்டிலே உள்ள ஏற்பாடுகளின் தன்மைபற்றி எடுத்துரைக்கலாம், போர் செய்திடப் பொன்னன வாய்ப்பு, மூன்று திங்களிலே ஏற்படும் என்பதற்கான காரணங்களை விளக்கலாம், என்று அவன் சென்றான், ஹிட்லரோ, சட்டையிலுள்ள பொத்தான்கள் எத்தனை என்று கேட்டுவிட்டார்; தெரியவில்லை கூற; திணறுகிருன்; ஆனல், உலகை ஒரு குடைக்கீழ் ஆளும் வல்லமை மிக்கோன், தந்தையர் நாட்டுக்குப் புதியநிலை ஏற்படுத்திக் கொடுத்த தலைவன், இந்தப் பொத்தான் கணக்கினைக்கூட அறிந்துவைத்திருக்கிருனே! நாம் இதனை அலட்சியப்படுத்தினேம்—நம் அதிபனே, இதனையும் அறிந்துவைத்திருக்கிருன்! இல்லாமலா, அதிபர் என்ற நிலைக்கு, ஆண்டவன் இவரை உயர்த்தியிருக்கிருர். இத்துணை அறிவாற்றல் மிக்கவர், படை எடுப்புக்கு நாள் குறித்தால், எல்லாம் அறிந்துதான் குறித்திருப்பார்! நாம், யார், அதைக் குறைகூற; ஐயப்பாடு;

எழுப்ப! அதிபர் அறிவார் அனைத்தும்!!—என்றுதான், படைப்பிரிவுத் தலைவனே எண்ணுவான், பேசுவான், பாராட்டுதலுடன்.

ஆனால் உண்மையில் ஹிட்லர், போர்த்துறைப் பிரச்சினைகளிலே வல்லவன் அல்ல, என்பது, அவன் ஒரேநேரத்தில், பலமுனைகளில் களங்களை உண்டாக்கிக் கொண்டு கெட்டொழிந்ததால், விளக்கமாகிறது.

அந்த முடிவு எழுகிற வரையில், ஹிட்லர் கொட்டிக் காட்டிய, 'தகவல்கள்'–எதுவும் தன் நினைவிலே பதிந்து இருக்கும் என்று எடுத்துக்காட்டியது, ஆகியவற்றைப் பார்த்து உடனிருந்தோர் மட்டுமா, உலகினரே, மலைத்துக் கிடந்தனர்.

தம்பி! இதுபோலவே, மிகச்சாதாரணமான, அடிப் படையல்லாத தகவல்களைச் சேகரித்து நினைவிலே வைத்துக்கொண்டு, உடனிருப்போரைத் திணற அடிக்கும் கருத்துக் கழைக்கூத்தர் நிரம்ப இருக்கிறார்கள்; பார்த்திருப்பாய்.

அவர்கள் தம்மை, ஆதாரமளிக்கும் ஆற்றல் மிக்கோர் என்றும், புள்ளிவிவரப் புலிகளென்றும் பிறர் எண்ணிக்கொள்ளும்படி நடந்துகொள்வர்.

உழவர்களுக்குப் பொறுக்கு விதைகளின் அருமை பற்றிய தகவல் அளிப்பர்; ஏர் பூட்டி ஓட்டி அறியார்! வணிகர்களுக்கு, ஜாவா சர்க்கரையால் கிடைக்கக் கூடிய இலாபம் பற்றி எடுத்துரைப்பார்கள்; ஒரு தொழிலிலும் ஈடுபட்டு இலாபம் பெற்றவர்களாக இருக்கவே மாட்டார்கள். இசைவாணர்களின் இல்லத்தின் அளவிலிருந்து அவர்கள் பூசிக்கொள்ளும் கலவையின் விலை வரையில் தகவல் தருவார்கள்; பல்லவிக்கும் அனுபல்லவிக்கும் உள்ள தொடர்பு கூடத் தெரிந்திருக்காது. மூன்றடுக்கு மாடிவீடு எவ்வளவு சிக்கனமாகக் கட்டி முடிக்கமுடியும் என்ற திட்டம் தருவார்கள்; தாம் இருக்கும் வீட்டிலே கூரையில் ஒழுக்கல் இருக்கும்.

தம்பி! இப்படிப்பட்டவர்கள், நிரம்ப இருக்கிறார்கள்.

இவர்கள், பல தகவல்களை நினைவிலே வைத்துக் கொள்வர்; கேட்பவர்களை மலைக்கச்செய்ய; வேறு கவைக்குதவும் விதமாக அல்ல.

நான், குறிப்பிட்ட 'நினைவு', இவை போன்றது அல்ல.

ஆய்ந்தறிந்துகொண்ட நினைவுகள்!

அந்த நினைவுகளேகூடச் சில வேளைகளிலே, கலைந்தும் குலைந்தும் போகின்றன; சிதைந்தும் சிதறியும் போய்விடுகின்றன என்றால், 'கனவு', கண்டது கண்டபடியேவா, நினைவிற்கு வரும்? வாராது! ஆனால், கனவுகள் கண்டனரே, பலர்!! தாம் கண்ட கனவுகளைப் பிறருக்கும் எடுத்துக் கூறியுள்ளனரே! அம்மட்டோ! கனவுகள் நனவாகக் கண்டும் உள்ளனரே? அஃது எங்ஙனம் எனின், அவர்கள் கண்ட கனவுகள், பட்டப் பகலில்! கண்விழித்த நிலையில்!! அவர்களின் கனவு என்பது அவர்கள், தமது எண்ணத்தை வண்ணக் குழம்பாக்கி, அது கொண்டு தீட்டிய ஓவியம்—தமது நெஞ்சத் திரையிலே தீட்டிவைத்த ஓவியம்! அதனைக் காணவேண்டின் அவர்தம் நெஞ்சத்தை அறிதல் வேண்டும்.

ஊமை கண்ட கனவு ஊருக்குத் தெரியாது!

உலுத்தன் காணும் கனவை, ஊருக்கு உரைக்க மாட்டான்.

உத்தமரின் கனவுகள், நனவாகிவிடுகின்றன; உருப்படாதாரின் நனவுகள் கனவாகிப் போகின்றன.

***எல்லாம் வெறும் கனவு!***

என்று ஏளனம் கிளப்பக் கேட்டிருக்கிறோம்.

***கனவில்தானே! எல்லாம் காணலாம்!!***

என்ற கேலிப்பேச்சுக் கேட்டுள்ளோம்.

***கனவு காண்கிறான்!***

என்று ஆதிக்கக் குரலிற் பேசக் கேட்டிருக்கிறோம்.

ஆனால், தம்பி! கனவுகள் நனவாகியுள்ளன!

விடுதலை வரலாறுகள், விஞ்ஞான வெற்றிகள், கனவுகள் நனவானதன், விளைவுகள்—அறியோமா!!

ஆற்றோரம்! அந்திசாயும் நேரம்! ஊர்ந்து செல்லும் நிலையிலுள்ளான், உடலெங்கும் புண்பட்டான்!! போர் வீரன்—வாளிழந்தான், உடல் வலிவிழந்தான், உயிர் இழக்குமுன், வெற்றி பெற்றாகவேண்டும் என்ற எண்ணத்தான். இக்கரையில் படுத்தபடி, எதிர்ப்புறம் நெடுந்தொலைவில், தெரியும் எதிரிகளின் நடமாட்டத்தைக் காண்கிறான்; கோபம் கொப்பளிக்கிறது! கண்களிலே ஓர் ஒளி — வெறிகொண்டவனோ என்று எண்ணுவர், அதனைக் காண்போர்! கண் எதிரே, மாற்றார்! கட்கமேந்த இயலவில்லை!! நெஞ்சம் நெருப்புடை உலையாகிறது! ஏதேதோ எண்ணுகின்றான்!! தம்பி! முகத்திலே ஓர் மகிழ்ச்சிக்குறி தெரிகிறது! ஏன்? எதையோ காண்கிறான்—எதிர்காலத்தில் ஒரு சிறுபகுதியை!! கனவு காண்கிறான், தம்பி! கனவு! கேட்போமா! அவனை, வீரனே! நீ காணும் கனவு என்ன என்று? பாவம், களைப்பு மேலிடுகிறது, அவனுக்கு; பிறகு கேட்போம்.

அண்ணன்,

# கடமையாற்றுவோம் வாரீர்!

—[ கருணை ]—

"கொலைத் தொழில் செய்வோருக்குச் சமமாகத்தான் மொழிக்குத் துரோகம் செய்யும் வீணர்களையும் கருதவேண்டும்" என்றார் மறைந்த மறத்தமிழர் டாக்டர், நாவலர் பாரதியார் அவர்கள். இந்த உண்மையை இன்றுள்ள நம் தமிழக மக்கள் நன்கு உணர்ந்தார்களேயானால், கொலை புரிபவனை எவ்வாறு தள்ளி வைப்பார்களோ அதுபோல தமிழுக்குத் தீங்கு இழைக்க எண்ணும்இன்றைய தீயோரையும் தள்ளி வைக்கவேண்டும்.

ஒருபுறம் தமிழுக்கு நன்மை செய்வோர் போன்று பசப்பு வார்த்தைகள் பேசி நடித்துக் காட்டும் அமைச்சர்கள், மறுபுறம் வடக்கின் வரி வடிவமான தேவநாகரியை நாட்டின் பொது எழுத்தாக ஏற்றுக்கொள்ளலாம் என்ற ஒப்புதலை அளிக்க முன் வந்துள்ளதை நாம் நினைத்தால் "நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட..........." என்றுதான் பாடத் தோன்றுகிறது. இவர்கள் தான் அடிக்கடி கூறுகின்றனர், நாங்களும் தமிழர்கள்தான்; எங்களுக்கும் தமிழ் உணர்ச்சியுண்டு; தமிழுக்குத் தீங்கிழைக்க யார் முயன்றாலும் எளிதில் விடோம்" என்று மீசையின்மேல் கைபோடுகின்றனர். அதற்கு ஏற்றாற்போல கல்வி அமைச்சர் அவர்கள், ஆகஸ்டு 21-ம் நாள் சென்னையில் நடைபெற்ற சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழக விழாவில்,

"தேவநாகரியைப் பொது எழுத்தாக ஏற்றுக்கொள்ளலாம் என்ற கருத்துத் தான் தெரிவிக்கப்பட்டதே தவிர, அது முடிவானதல்ல" — என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஒரு கருத்தை மேலிடத்தில், ஏற்றுக்கொள்கிறோம் என்று கூறிவிட்டு 'அது முடிவானதல்ல' என்று இங்குவந்து கூறினால் என்ன பொருள்? வடதிசை போகும் போது 'ஆமாம்' போட்டுவிட்டுத், தென்திசை திரும்பும்போது தமிழ் வாடை புரட்சி கலந்து வீசும்போது "இல்லைஇல்லை;அதுமுடிவானதல்ல" என்று வெளிக்குக் கூறுவதுதான் அமைச்சர்களுக்கழகா...? டில்லியில் கூடிய முதலமைச்சர்கள் மாநாட்டில், "தேவநாகரியைப் பொது எழுத்தாக ஏற்றுக்கொள்ளலாம் என்ற கருத்துத்தான் தெரிவிக்கப்பட்டதே தவிர, அது முடிவானதல்ல" (தமிழ் நாடு (மதுரைப் பதிப்பு) 22—8—61) என்று கல்வி அமைச்சர் அவர்களே சென்னையில் பேசியுள்ளார்கள். இந்தக் கருத்து எதைக் காட்டுகிறது? அங்கு ஒருவிதமும் இங்கு ஒருவிதமும் பேசுகிறார்கள் என்பதைத் தானே! உண்மைத் தமிழ்ப்பற்று, அமைச்சர்கள் நெஞ்சில் உறைந்திருக்குமானால், அந்த இடத்திலேயே "செந்தமிழாம் எந்தமிழுக்கு ஊறு விளைவிக்காதீர்! இது ஒவ்வாதது; தீதானது!"என்று முகத்தில்அறைந்தாற்போலக் கூறி இருக்கலாமே! ஏன் அவ்வாறு செய்யவில்லை? அவ்வாறு செய்ய இதயம் இடம் தரவில்லை என்றே வைத்துக்கொண்டாலும், தேவநாகரி எழுத்துத் திணிப்புக்கு எதிராக மாணவர்கள் தங்கள் கண்டனக் குரலைச் சென்னையில் எழுப்பினார்கள். அந்நிகழ்ச்சியைக் கண்குளிரக் கண்டோம். எத்துணை வீரம்! எத்துணை உணர்ச்சி! உடம்பிலுள்ள மயிர்க் கால்கள் குத்திட்டு நின்றன அக்காட்சியைக் கண்டு!

இந்த நிகழ்ச்சியைக் கண்டிக்க முற்பட்ட அமைச்சர் அவர்கள்; "மாணவர்கள் மொழிப் பிரச்சினையில் ஈடுபடலாகாது!" என்ற அறிவுரை பகன்றுள்ளார்கள். ஒரு மொழியைப் படிப்பவர்கள் மாணவர்களே அல்லாமல், அவர்களைப் பெற்று வளர்த்த தாய் தந்தையர்களா பள்ளியில் வந்து அமர்ந்து கல்வி கற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் இப்பிரச்சனையில் ஈடுபட. தங்கள் படிப்புச் சிதறாமல்—சீர்குலையாமல்—தங்கள் பிற்கால வாழ்வு சிதையாமல் இருக்கவேண்டுமானால்,அதைக் கவனித்துக்கொள்வது மாணவர்கள் கடமையே தவிர, பெற்றோர்கள் கடமையல்லவே! நாட்டிலுள்ள பெற்றோர் அனைவரும் இதுபோன்ற மொழிச் சிக்கலில் ஈடுபட்டுவிட்டார்களேயானால், ஏன் இந்த நாடு இந்த இழிநிலையில் நின்று தவிக்கிறது! உயிரினும் மேலான மொழிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சம் இன்றும் நாளையும் நாட்டில் உலவிவருவது ஏன்?

மேலும் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். "இந்தியாவில் இன்று ஏற்பட்டுள்ள மொழிச் சிக்கலைத் தீர்க்கவேண்டுமானால், இந்தியா பல மொழிகள் பேசும் மக்களைக் கொண்ட நாடு என்ற உணர்வை எல்லோரும் பெற்றே தீரவேண்டும்" —இது அன்னாரின் பொன்மொழி! வடக்கு நோக்கிக் கூறவேண்டிய பொன்மொழியை இங்கு வந்து கூறுகிறார். நாடு ஒன்று என்று ஒற்றுமைப்படுத்தத் தவிக்கிறாரே.....இவர் தன் மந்திரக்கோலைக் காட்டி, தென் மொழியினர் மொழிப் பிரச்சினையில் ஒன்றுபடுவர். எனவே தேவநாகரி

எழுத்தைத் திணிக்காதே! என்ற குரலை ஏன் இவர் கொடுக்கவில்லை. "இவர்களுக்கு அங்கு போனல் கையும் ஓடாது, மூளையும் வேலை செய்யாது'' என்று கூறும் சி. ஆர். போன்ற பெரியவர்களின் கூற்றும், நாடு வாழ எண்ணும் நல்லோரின் எண்ணமும் இதன் மூலம் தெளிவு அடைகிறதல்லவா.

டாக்டர் அ. சிதம்பரநாதனர் அவர்கள், அதே சைவ சித்தாந்தக் கழகத்தில் திருவள்ளுவர் படத் திறப்பு விழாவில்,

"வடக்கு வரிவடிவம் தென் தமிழுக்கு ஒவ்வாதது. பன்னெடுங் காலம் பழகிய பைந்தமிழ் எழுத்தைக் கைவிடோம்!'' என்று வீர முழக்கமிட்டுள்ளாரே.......அவரை நாடு பாராட்டுகிறது. இத்துடன் அவர் நின்றுவிடவில்லை. "இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளின் எழுத்து முறைகளை எல்லாம் தள்ளிவிட்டுத் தேவநாகரி வடிவத்தைத் திணிக்க முயல்வது இந்திய அரசியல் சட்டத்திற்குப் புறம்பான செயல். நாட்டின் ஒற்றுமையை வளர்ப்பதாகப் போலிக் காரணம் காட்டித்,தேவநாகரி எழுத்துக்களைத் திணிக்கும் முயற்சி தமிழை அழிக்கும் செயலாகும்'' என்று குறிப்பிட்டுவிட்டுத்,'' திருக்குறளைத் தமிழ் எழுத்தில் அல்லாமல் 'தேவநாகரி' எழுத்தில் எழுதித் தமிழ் மக்கள் படிக்கவேண்டும் என்ற நிலை இந்திய நாட்டின் ஒற்றுமையின் பெயரால் உருவாகிக்கொண்டிருப்பதை இந்த நேரத்தில் கண்டிக்காமல் இருக்க முடியாது. இந்திய நாட்டு மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியும், ஒருமை மனப்பான்மையும் வளர்க்கப்பட வேண்டுவது உண்மையாயினும், இந்திய எல்லா மொழிகளின் எழுத்துக்களை அறவே தள்ளிவிட்டு, இம்மொழிகளில் எல்லாம் ஒரே எழுத்து முறையைப் பின்பற்றவேண்டும் என்பதும், சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகள் எழுதப்படுகின்ற நாகரி முறை தான் பொது எழுத்து முறையாக வருவதற்குத் தக்கது என்றும் கூறுவது பொருந்தாது. 2000 ஆண்டுகட்கு முன் இருந்த நூல்கள் அனைத்தும் இப்போதுள்ள தமிழ் எழுத்து முறையில் அமைந்துள்ளன. அந்த நெடுங்கணக்கு முறையை அடியோடு மாற்றிவிட்டு அதற்குப் பதிலாக நாகரி வடிவம் பயன்படுத்துவது தகாதது. நாகரி முறை தமிழ் எழுத்துக்கு ஒவ்வாத ஒரு முறை. ஒரே தலைமுறையில் பழைய நூல்களை எல்லாம் தமிழ் எழுத்தில் படித்த மக்கள், புது எழுத்து முறையினல் திண்டாடுவது ஒரு புறமும், எழுத்து முறையில் பயில முற்பட்டுத் தமிழ் எழுத்தில் அமைந்த நூல்களைத் தொடமுடியாத அளவு குருடர்களாகிவிடக் கூடிய குழந்தைகள் ஒருபுறமும் தவித்து நிற்கக்கூடிய நிலையுண்டாகும். அரசியல் சட்ட 29-வது பிரிவின்படி தமிழ் மொழியையும், தமிழ்க் கலாச்சாரத்தின் உரிமையையும் காப்பாற்றவேண்டும்'' என்றும் கூறியிருப்பதைத் தமிழ்உணர்வுகொண்ட அனைவரும் கூர்ந்து நோக்கவேண்டும்.

தமிழ் மொழியின் உரிமையை நாட்டுக்கு எடுத்தோதிய ஏ. சி. செட்டியார் அவர்கள் வருங்காலப் படிப்பும், படிக்கும் குழந்தைகளும் தேவநாகரி வடிவத் திணிப்பால் குருடர்களாகவும், குருட்டுப் படிப்பாகவும் தமிழ் மக்களுக்கு அமைந்து விடக்கூடாது என்ற முன்எச்சரிக்கையை விடுத்துள்ளார். அன்னர், அரசின் ஆங்கில—தமிழ் அகராதிப் பிரிவின் தலைவராகப் பணியாற்றுகின்ருர். அவர் பேசுகிருர் தமிழின் வருங்காலம் குறித்து. ஆனல், தமிழ் நாட்டுச் சட்டமன்றம் தமிழக மக்களின் உரிமையைப் பிரதிபலிக்கும் உன்னதமானதோர் அமைப்பு. அதைக்கொண்டு செலுத்துவோர், தமிழ் — தமிழக மக்கள் — தமிழக உரிமையைக் கட்டிக்காத்துப் பாதுகாத்துவரக் கடமைப்பட்டவர்கள். மக்களின் வரிப்பணத்திலிருந்து ஆயிரக்கணக்காகச் சம்பளம் பெற்று வருபவர்கள் அமைச்சர்கள். இவர்கள் நாகரி எழுத்துத் திணிப்பை ஆதரிக்கிருர்கள். ஒப்புக்கொண்டுள்ளோம் என்று பொது மக்களிடையே வந்து பேசுகிருர்கள்.

இராசகோபாலாச்சாரியார் ஆகஸ்டு 19-ம் நாள் சென்னையில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில், "தமிழ் எழுத்தையெல்லாம் தேவநாகரி எழுத்தாக மாற்றப்போவதாக டில்லியில் முடிவு செய்திருக்கிருர்கள். அதை ஒப்புக்கொண்ட தமிழக அமைச்சர்கள் முணுமுணுத்துக்கொண்டு திரும்பிவிட்டார்கள். இவர்களால் எதுவும் செய்ய முடியாது'' என்று கூறியுள்ளார்.

இதற்குமேல், நாட்டு விடுதலை—மொழியுரிமை பற்றி எப்பொழுதும் சிந்தித்து வரும் நமது பொதுச்செயலாளர் அவர்கள், ஆட்சியாளர்களை நாம் எதிர்நோக்கவும் கூடாது; இவர்களால் தமிழ் அழிந்துபோகும் என்பதையுணர்ந்து, "திரண்டெழுங்கள் திராவிடர்களே!'' என்ற முரசொலியை விடுத்து, தமிழ் இளைஞர்களையும், மொழி காக்கும் வீரர்களையும் அழைத்து, "இதோ! தமிழுக்கு இழுக்கு வருகிறது, தமிழைச் சிறிது சிறிதாகத் துரோகிகள் அழிக்க முற்பட்டு வருகிருர்கள். எனவே, எழுவோம்! உயிரினும் மேலான மொழியைக் காப்போம்! உரிமையைக் காப்போம்! என்ற அன்பழைப்பு விடுத்துள்ளார்கள்.

இவர்களில் யார் தமிழைஉண்மை அன்போடு நேசித்துப் பாதுகாத்து வருகிருர்கள் என்பதையும், தமிழுக்கு ஊனம் நேரிடும்போது உயிர் பொருள் அனைத்தும் விடுத்து, "தமிழே எங்கள் உயிருக்கு நேர்!'' என்று எண்ணிச் செயலாற்றுகிருர்கள் என்பதையும் இப்போது நாம் உணர்ந்துகொள்ளலாம். எனவே, ஆளும் கட்சியினர் "சுகம் எங்கே?'' என்று தேடியலையாமல், தமிழுக்கு வாழ்வு எங்கே? என்று சிந்தித்துச் செயலாற்றவில்லையென்ருல், ஒரு காலத்தில் தமிழ்த் துரோகிகள் நம் நாட்டை ஆண்டிருக்கிருர்கள்; அவர்கள் நம் தேன் மொழியாம் தமிழ்மொழியைக் காட்டிக்கொடுத்தவர்கள்'' என்று பிற்காலத் திராவிட ஆட்சியில் உள்ள குழந்தைகள் ஏசுவர். அதை மனதிலிருத்தித் தமிழ்மொழியில் தேவநாகரி வடிவத்தைப் புக விடாமல் தடுத்து நிறுத்தி, மொழிகாக்க நம் விழிகளைத் தூக்கிக் கடமையாற்றுவோம் வாரீர்!

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஒவ்வொரு வாயில் வழியாகவும் உள்ளே நன்ருக நோக்கிவிட்டுக், கூவிவிட்டுச் சென்ருன். சில வீடுகளிலிருந்து பெரியவர்களும், குழந்தைகளும் வெளியே தலைநீட்டி, அலட்சியமாகவும், வேடிக்கையாகவும் அவனை நோக்குவதைக் கண்டான். சில வீடுகளின் எதிரில் நின்றுகொண்டிருந்தவர்கள், அவனுடைய கூவல் அவர்கள் செவியிற் படாததுபோல், தங்கள் தங்கள் பேச்சிலும் வேலையிலும் ஈடுபாடு கொண்டவர்களாய் இயங்கிக் கொண்டிருந்தார்கள். சில வீடுகளின் முன்னல் ஆள் வாடையே இல்லை.

அவன் எந்த வீடென்று தேடுவான்? யாரென்று கேட்பான்? ஒவ்வொரு வீட்டெதிரிலும் தயங்கித் தயங்கி நின்றுவிட்டுக் கூவிவிட்டு நகர்ந்தான் — நடந்தான் — விரைந்தான். அந்தத் தெருவின் ஒரு கோடியிலிருந்து, மறுகோடி வரை இரண்டு முறை அவன் அலைந்து பார்த்துவிட்டான். ஒவ்வொரு வீடாக உற்று, உற்றுத் தேடிப்பார்த்துவிட்டான். ஒரு பயனுமே இல்லை. கால்கள் நொந்தன. காது அடைத்தது. கண்கள் பஞ்சடைந்துவிட்டன. வந்து, வந்து தலைகாட்டிவிட்டுச் சென்று அடங்கிக்கொண்ட பசி, விட்டுச்சென்ற சுவடாக ஒருவிதக் களைப்பும், கிறக்கமும் அவனை நன்ருக ஆட்கொண்டுவிட்டது. மாலை வாணிபத்துக்குக் கடைத்தெருப் பக்கம் அந்தக் கிறக்கத்தோடு, களைப்போடு, பசியோடு, அசதியோடு அவனல் போகமுடியுமா?—அதனல் வருவாய் இழப்பு வேறு.

பொழுது சாய்ந்துவிட்டது. நேரே தன் குடிசிலை நோக்கி அவன் நடந்தான். இப்போது அவன் உள்ளத்தில் ஒரு எண்ணமும் இல்லை. பேசாமற் போய், வேண்டுமானல் கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டு, அப்படியே படுத்துக்கொண்டால் போதும்.

மறுநாள் பொழுது விடிந்தது. முதல் வேலையாக அந்தச் சிறுமியைத்தேடிப்பிடித்துச் சில்லறையை ஒப்படைத்துவிடவேண்டும் என்ற முடிவுடன் மலையன் கிளம்பினன்—நடந்தான். பல தெருக்களைக் கடந்து நடந்துகொண்டேயிருந்தான். வழக்கம்போல் அவன் கூவவில்லை. தன் வாணிபக் குரலை உயர்த்தி முழங்குவதற்கு அவன் மறந்துவிட்டானே, அல்லது, அந்த அதிகாலை வேளையில் குரல் எழுப்ப வேண்டாம் என்று எண்ணினனே! தன்பாட்டிற்கு மௌனமாக நடந்து கொண்டேயிருந்தான்.

குறித்த தெருவை மலையன் அடைந்தான். தெருக்கோடியை அடைந்ததுமே, நாலைந்து வீடுகளுக்கு அப்பால் அந்தச் சிறுமி, வீட்டு வாயிலொன்றின் எதிரில் நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். சிறுமியை நோக்கிய மலையன் விரைந்தான். தலைச் சுமையை வீட்டெதிரில் இறக்கிவைத்தான். "பாப்பா, நேத்திக்கு நீ சில்லறை வாங்கிக்கவில்லையே?" என்று சிறுமியைப் பார்த்து வினவினன். சிறுமியின் கரத்தில் முதல் நாள் வாங்கிய மூக்குப் பாத்திரம் இருந்தது. மலையனை அங்கே எதிர்பார்த்து நின்றவள் போல், "ஓ, வந்துட்டியா?" என்று விந்தை நோக்கோடு வினவிவிட்டு "அப்பா, அப்பா!" என்று விளித்தவண்ணம் உள்ளே ஓடினள் அந்தச் சிறுமி.

உள்ளே இருந்து ஒரு பெரிய கனவான் வந்தார். வரும்போதே மலையனை முறைத்துப் பார்த்துக் கொண்டு வந்தார். "ஏண்டா, நீ வியாபாரம் செய்யறவனு? இல்லை, கேட்கிறேன், வியாபாரம் செய்யறவனு நீ? குழந்தைகள் கையிலே என்ன வைத்திருந்தாலும் வாங்கிக் கொண்டு போய்விடுவதா?—உன்னை நானே தேடிப்பிடிக்கவேண்டுமென்று நினைத்திருந்தேன். நீயே வந்துவிட்டாய்! உன்மாதிரிப் பயல்களையெல்லாம் சும்மாவிடக்கூடாதுடா! பாத்திரம் விற்கிறவன்போலே வர்றது! கிடைச்சதைச் சுருட்டிக்கிட்டுப் போயிடறது! இல்லே! இரு, இரு, நீ இன்று வசமாக அகப்பட்டுக் கொண்டே!" என்று பொரிந்து தள்ளினர் அந்தக் கனவான்.

மலையன் வெலவெலத்துப் போனன். அவனுக்கு நா எழவில்லை. உடல் உதறல் எடுத்தது. உள்ளம் பதைத்தது. "இல்லீங்க. எனக்கு வீடு தெரியலீங்க!" என்று குழம்பிக் கலங்கிக் கூறினன் அவன்.

"உம், வீடு தெரியலீயா? வீடு தெரியாமேதான் நேற்றுப் பாத்திரத்தைப் பறித்துக்கொண்டுபோனே! இன்று நேரே இங்கே வந்திருக்கிறே, இல்லே? யார்கிட்டே ஏமாத்தப் பார்க்கிறே? ஒரு நாளைக்கு ஆயிரம் தடவை இந்தத் தெருவிலேயே நடக்கிறே, உனக்கா வீடு தெரியாது?—டேய், கவனம் வச்சுக்கோ! பல நாள் திருடன் ஒரு நாள் அகப்பட்டுக் கொள்வான்."

"இல்லீங்க ஐயா, இல்லீங்க ஐயா!" பெரும் நடுக்கத்துடன் கைகளைக் குவித்தவாறு விநயமாக வேண்டினன் மலையன். அந்த 'இல்லீங்க ஐயா'வைத் தவிர வேறு சொல் எதையும் நினைக்கமுடியவில்லை; சொல்லமுடியவில்லை அவனல்.

சிறுமிக்குத் தன் அப்பாவை அழைத்து வந்துவிட்டு, அவர் கூக்குரல் போடுவதைப் பார்த்துச் சுவைத்தது போதவில்லை. திரும்பவும் உள்ளே ஓடி அம்மாவையும் அழைத்து வந்தாள்.

அந்தப் பெரிய மனிதரின் இல்லத்தரசி வெளியே வந்து பாத்திரக் காரனைப் பார்த்ததும், ஆவேசம் பிடித்தவள்போல் ஆடத் தொடங்கினள்.

"ஏண்டா, திருட்டுப் பயலே! எத்தனைநாள் இந்த மாதிரி குழந்தை கிட்டேயிருந்து பாத்திரத்தைப் பறிச்சிக்கிட்டுப் போயிருக்கிறே? உன்னை எல்லாம் சும்மாவிடக் கூடாதுடா! நாதாரிப் பசங்களா!" என்று இடி குரல் எழுப்பி, அதட்டிக்கொண்டு கையை ஓங்கியபடி மலையனை நெருங்கினள் அவள்.

"சேச்சே, நாம் ஒண்ணும் செய்யக்கூடாது. அவனை, — சொல்ல வேண்டிய இடத்திலே சொல்லிச் செய்யவேண்டியதைச் செய்யலாம்!" என்று தம் குடும்பத் தலைவியைத் தடுத்து நிறுத்தினர் அந்தப் பெரிய மனிதர். பிறகு, "டேய், யாரடா அங்கே, போய் இன்ஸ்பெக்டரை அழைத்துவாடா!" என்று வேலைக்காரனைப் பார்த்து இரைந்து பணித்தார் அவர்.

சற்றுநேரத்தில் இன்ஸ்பெக்டர் வந்தார். பெரிய மனிதர் சொன்னதை அப்படியே எடுத்துக்கொள்ளாமல் இருக்கமுடியுமா அவரால்? உடன்வந்த சேவகர்கள் மலையனுக்கு விலங்கு மாட்டினர். காவல் நிலையம் நோக்கி எல்லாரும் நடந்தனர்.

பெரிய எண்ணத்தைக் கொண்ட அந்தச் சிறுவாழ்வினன், மலையன் தவித்தான், துடித்தான்; விடுபட வழி காணுது அலமந்து சென்ருன். ஆய்ந்தறியும் வன்மையிழந்த சின்னப் புத்தியைக் கொண்ட அந்தப் பெரிய மனிதன் செருக்கினல், வீம்பினல் கால்கொண்ட தன் முனைப்போடு வெற்றிக்களி உடன்வரச் சென்ருன்.

❋

உலக சரித்திரத்தில் வெற்றி வீரர்கள் பலர் பவனி வந்திருக்கின்றனர். இத்தாலிய சரிதையிலே, தனக்கு நிகரில்லை என்று போர்ப்பாசறை; கண்ட இடமெல்லாம் வெற்றிமாலை மார்பிலே தவழ பவனி வந்தான் வீரன் ஜூலியஸ் ஸீஸர்.

கிரேக்கநாட்டிலே வாலிப வயதைத் தாண்டுமுன்பாக, உலகம் வியக்கும் வண்ணம், மாபெரும் வெற்றி வீரனாக, எதிர்ப்போர் எவருமில்லை, இவ்வுலகையே எனதடிமையாக்குவேன், என்று, நாடுபல கடந்து, வெற்றிபல கண்டான், மாபெரும் வீரன் அலெக்ஸாண்டர்.

ஐரோப்பியகண்டமே ஒரு வீரனின் பெயரைக் கேட்டவுடன், நடுநடுங்கியது. அவன்தான் உலக சரித்திரமே கண்டிராத மாபெரும் தளபதி நெப்போலியன். சாதாரண போர்வீரனாக இருந்து, படிப்படியாக உயர்ந்து தனக்கு ஈடுகொடுப்போர் ஐரோப்பிய கண்டமெங்கிலும் கிடையாது, எத்தனை ஆயிரம் போர்ப்படை அணி வகுத்து வரினும் கொன்று குவிப்பேன் என்று இறுமாந்து நடந்தான்.

இப்படி உலகம் கண்ட வீரர்கள் எத்தனையோபேர். ஆனால், உலகம் விஞ்ஞானத்தில் முன்னேறிய பிறகு, துப்பாக்கி, வெடி, பீரங்கி, டாங்கி, போர் விமானங்கள், போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிப் போர்க்கப்பல்கள், பயங்கரவெடிமருந்து, ஆகிய போர்ச்சாதனைகளைக் கண்டபிறகு போர்முரசு கொட்டிய தளபதி ஹிட்லர். நாஸிக் கட்சியின் தலைவன். ஆயிரமாயிரம் மாணவர்களின் உள்ளத்தில் இடங்கொண்டு, வாலிபர் கூட்டம் பின்னே ஓடிவர, வீரர் வரிசை ஈச்சளென மொய்த்திருக்க ஜெர்மானிய மக்கள் அவன் ஒரு சொல் கேட்கக் காத்திருந்தனர்.

ஜெர்மன்நாட்டு மக்கள் உலகை ஆளப்பிறந்தவர்கள், ஆகவே, உலகையே ஜெர்மனிக்கு அடிமையாக்குவேன் என்று போர்முரசுகொட்டினான், போர்முரசு உலகெங்கணும் கேட்டது.

ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய நாடுகள் அடிபணிந்தன, இத்தாலிய சர்வாதிகாரி முஸோலினி, தனது வலக்கையை ஹிட்லரின் திண்தோள்களுக்கு உதவியாக அளித்தான். தொழில்துறையில், வேறெந்தநாட்டையும் மிஞ்சும் அளவிற்கு, மிகக்குறுகிய காலத்தில் முன்னேற்றத்தைக்கண்ட, திறம் படைத்த ஜப்பான்நாடு, தன் உதவியை அளித்தது. உலகில் கரிய போர்மேகங்கள் சுழன்று, சுழன்று அடிக்க, பெரியோர், சிறியோர், பெண்டிர், பிள்ளைகள், யாவரும், சுருண்டு சுருண்டு செத்து மடிந்தனர். கூடகோபுரங்கள் சாய்ந்தன.

# அங்கும் இங்கும்

—[கலை அன்பன்]—

மாடமாளிகைகள் தகர்ந்தன. அணைக்கட்டுகள், ஆலைகள், சாலைகள் இன்ன பிறவும் தவிடுபொடியாகின.

உலகமே ஹிட்லரின் ஆதிக்கத்துக்கு அடிபணிந்துவிடுமோ எனப் பலரும் அஞ்சினர். அத்தகு ஹிட்லரின் தலைநகர்தான் மாபெரும் பெர்லின் நகரம். உலகின் நகரங்களுக்கெல்லாம் தலையாய நகராக விளங்கியிருக்கலாம், ஹிட்லர் வெற்றிபெற்றுந்தால்.

ஆனால், பயங்கர யுத்தத்தின் முடிவு, ஹிட்லருக்கு பாதகமாக முடிய, ஹிட்லரின் ஆதிக்க வெறிக்கு உலகம் முடிவு தேடித் தந்ததால், நேச நாடுகள் வெற்றி பெற்று, ஜெர்மன் நாடு அடிபணிந்தது.

அதனைக் கூறுபோட்டு நேசநாடுகளும், ரஷ்ய நாடும் பங்கு போட்டுக் கொண்டன. பெர்லின் மாநகர் துண்டு போடப்பட்டது. அது போர்க்கால உடன்படிக்கையாகவும், பின்னல் ஜெர்மனியுடன், சமாதான உடன்படிக்கை செய்து கொள்வதென்று முடிவானதென்றாலும், நேச நாடுகளுக்கும் ரஷ்யாவிற்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, மாபெரும் ஜெர்மன் தேசம் மீண்டும் ஒன்றுபட்டு அரசியல் அமைக்க உரிமை அளிக்கப்படவில்லை, நேச நாடுகள் மேற்கு ஜெர்மனியைக் குடியரசாக்கிற்று, கிழக்கு ஜெர்மனியை ருஷ்யா பொதுவுடைமை நாடாக்கிற்று. பெர்லின் இரு கூறுகப் பிரிக்கப்பட்டது. ஜெர்மனி முழுச் சுதந்திரத்துடன் தனி நாடாக அமைய, ஜெர்மானிய மக்கள் அனைவரும் விரும்பினாலும், மேலை நாடுகளுக்கும், ரஷ்ய நாட்டிற்கும் உள்ள கருத்து வேறுபாடுகள் முற்றியதன் காரணமாகப் பெர்லின் சிக்கல் நெருக்கடியான கட்டத்தை யடைந்தது, பெர்லின் நகருக்கு நடுவே, ரஷ்யா, இரும்புக்கம்பி போட்டு, வேலியிட்டு, கிழக்கு ஜெர்மனியிலுள்ள மக்கள், மேற்குப் பெர்லினுக்குள் நுழைவதை அடியோடு தடுத்து நிறுத்திவிட்டது. மேற்குப் பெர்லின் நகரில் வேலை செய்யும் ஆயிரமாயிரம் கிழக்கு ஜெர்மன் தொழிலாளிகள், செய்வதறியாது திகைத்தனர். செல்வம் கொழிக்கும், மேற்கு பெர்லினுக்குள், கிழக்கு ஜெர்மனியிலிருந்து, நுழைவது, தடுக்கப்பட்டது.

பெர்லின் மாநகரின் நடுவே சுவர் எழுப்பப்பட்டு, இருமருங்கிலும் படை நிறுவப்பட்டதன் காரணமாக, எந்த நேரமும் போர் வெறி பீறிட்டுக் கிளம்பலாம் என்பது ஒருபுறமிருக்க, பெர்லின்வாழ் மக்கள் இரு கூறுகப் பிரிக்கப்பட்டனர், தப்பிச் செல்வோர் சுட்டுக் கொல்லப்படுகின்றனர், வன்மைமிக்க வாலிபன் ஒருவன், திண்தோள் கொண்டோன், டெல்டோவ் கால்வாயை, நீந்தியாவது கடந்துவிடுவோம் என்று நீந்திச் சென்றான். நடு ஆற்றில் நீந்திக் கொண்டிருக்கும்பொழுது சுட்டுக் கொல்லப்பட்டான். இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள்.

வேலை செய்யும் தொழிற்சாலை மேற்கிலே, தொழிலாளி கிழக்கே, ஒரு பகுதியிலே சகோதரன் வாழ, மறு பகுதியிலே சகோதரி, ஒரு பகுதியிலே தாய், மறு பகுதியிலே தனயன், ஒரு பகுதியிலே தந்தை, மறு பகுதியிலே மகள், இவ்வாறு பிரிக்கப்பட்டுவிட்ட பரிதாபம் பெர்லின் நகரிலே.

அங்கு, ஒன்றாக இருக்கவேண்டிய இடம் இரண்டாக்கப்பட்டுவிட்டது.

ஆனால், இங்கு பிரிந்து வாழும் முழு வாய்ப்பும் கொண்டு மிளிரும் திராவிடத்தை— தென்னகத்தை ஒட்டவைக்கும் முயற்சியில் முழு மூச்சாக இறங்கியுள்ளனர்.

கற்பிளவு — பொற்பிளவு — நீர்ப்பிளவு என்பார்களே! இந்த மூன்று வகையில் முதலிடத்தைத் தமதாக்கி, அதனை ஒட்டிவிட முடியும் என்கிறது டில்லி அரசு. அங்கு அப்படி! இங்கு இப்படி!!

பிரிக்க முடியாததைப் பிரித்து வைக்கும் பெருமுயற்சி அங்கே!

பிரியவேண்டிய உரிமையோடு கூடிய திராவிடத்தை ஒட்டவைக்கும் விரும்பத்தகாத—வேண்டப்படாத முயற்சி இங்கே!

# கடமையுள்ளம்

[கா. சொ. இராசசேகரன், பி. ஏ.]

**1954**-ம் ஆண்டு மார்ச் திங்கள் 28-ம் நாள் காலை 7-மணியளவில் ஆங்கிலக் கப்பலொன்று மத்தியதரைக் கடலிலே அல்ஜீரியாவிலிருந்து 50-கல் தொலைவிலே சென்றுகொண்டிருந்தது. அதன் பெயர் 'எம்பயர் வின்டிரஷ்' தொடுவானிலே காலைக்கதிரவனின் இன்முகத்தைக் காண மேல்தளத்திற்கு வந்த பிரயாணிகள், கப்பலின் மேல்தளம் மேலும் கீழும் பக்கவாட்டில் அசைவதையும், தளத்தின் இடைவெளியிலிருந்து புகை வருவதையும் கண்ணுற்றனர். கப்பலுக்குள்ளிருந்து வெடிக்கும் ஒலியும் கேட்க ஆரம்பித்தது.

இதற்கிடையிலே மாலுமி ஒருவன் அடித்தளத்திலிருந்து தள்ளாடிய வண்ணம் மேலேறிவந்து 'இயந்திர அறையிலே தீ''யெனக் கத்தியவண்ணம் வீழ்ந்து இறந்தான். அவன் தலைமயிரும், புருவமும் தீக்கிரையாகியதுடன், அவன் முகமும் தீயினால் கருக்கப்பட்டிருந்தது. அன்றியும், இயந்திர அறையில் இவனுடனிருந்த மூவர் புகைதாளாமல் திக்குமுக்காடி இறந்துபட்டனர். தீயோ தன் கோரச் செங்கரங்களை நீட்டித் தன் பசியை ஆற்றியவண்ணமிருந்தது. அடித்தளம் முழுமையும் தீ. கப்பல்அலுவலர்கள் அதிர்ச்சியடையாமல், பதட்டமின்றி, அவர்களுக்கு இட்ட கடமையை தயங்காது விரைந்து ஆற்றிய வண்ணமிருந்தனர். மற்றும் சிலர் பிரயாணிகளிடையே சென்று அவர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறைகளைப்பற்றி கூறிக்கொண்டிருந்தனர். கப்பற் தலைவன் வில்லியம் வில்சன் என்பவர் பிரயாணிகளைக் கப்பலிலிருந்து விடுவித்து உடன் வெளியேற்றுவதற்கு ஏற்ற ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார். பல, உயிர் தப்பும் படகுகளும், மிதக்கும் உயிர் காக்கும் சாதனங்களும் தீயினால் அழிந்துபோயின. கையிருப்பதோ 12 உயிர்தப்பும் படகுகள். கப்பலிலிருந்த போர் வீரர்களின் எண்ணிக்கையோ 1498. அவர்கள் தத்தம் குடும்பங்களுடன் தூரக்கிழக்கு நாடுகளிலிருந்து தம் நாடு திரும்புகிறவர்கள். இந்நிலையில் யாவருமே உயிர்தப்புவது என்பது மிகக் கடினம். இருப்பதோ மிகக் குறைந்த நேரம். என்ன செய்வது?

அச்சமயம், கப்பற் படைத் தளபதி கர்னல் ராபர்ட் ஸ்காட்டின் கட்டளைகள் அங்குள்ள ஒலிபரப்பும் பெட்டியிலிருந்து வெளிவந்தன. தப்பிச் செல்லப் படகு கிட்டும் வரை அங்குள்ள எல்லா இராணுவ வீரர்களையும் 'பர்க்கன் கெட் டிரில்'லில் இருத்தல் வேண்டும் என்பதேஅக்கட்டளை. 'பர்க்கன் கெட் டிரில்' என்றால், ஒழுங்காக, அணியில் அசையாது இருத்தலேயாகும். எல்லா இராணுவ வீரர்களும் கட்டளையை ஏற்று இராணுவ அணியில் ஒருங்கே நின்றனர். ஒருவரும் படகு அருகே தப்பிச் செல்ல முயலவில்லை. கப்பல் அலுவலர்கள் அவரவர் கடமையை விரைந்து செய்ய முற்பட்டனர்.

கப்பலின் மேல்தளத்திலே இங்ஙனமிருக்க, அங்குள்ள படகுகளில் பெண்களும், குழந்தைகளும் முதற்கண் ஏற்றப்பட்டனர். அங்கிருந்த படகுகளில் இன்னும் சிலருக்கு இடமிருந்தது. இதையறிந்த கர்னல் ஸ்காட், அணியிலிருந்த இளைஞர்களைப் பொறுக்கிப் படகிலே ஏற்றினார். இந்நிலையில் யாராவது ஒருவர் தன்னலங்கருதியோ, ஆத்திரங்கொண்டோ அன்றித் தப்பிச்செல்ல வேண்டும் என்ற பேரவாவினால் படகருகே ஓடியிருப்பினும், அணியிலிலுள்ள ஏனையோர் அறிவிழந்து, படகை நோக்கி ஓடியிருப்பர். இஃதன்றி, அணியிலிருப்போர் சிறிதும் பதட்டமின்றிக்கடமையையுணர்ந்து கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து ஒழுங்கை மேற்கொண்டனர். கடைசிப் படகு, தண்ணீரில், கப்பலைப் பிரிந்து மிதக்கலாயிற்று.

இராணுவ அணியிலே, முந்நூறு போர் வீரர்கள், சிறிதும் சோர்வின்றி முணுமுணுக்காமல், அமைதியாக அணிவகுத்து நின்றனர். கப்பற் தலைவன் வில்சனின் உடைகளோ கருகிக் கந்தலாயின. கொழுந்துவிட்டெரியும் தீ அவர்தம் காலணியை உண்டதோடல்லாமல் காலையும் பதம்பார்த்துவிட்டது. பிறகு, கடற் தளபதியின் உத்தரவுக்குப் பணிந்து இராணுவ வீரர்கள் யாவரும், காலணியையும், மேலாடைகளையும் கழற்றியெறிந்துவிட்டுக் கப்பலிலுள்ள, உடைந்த பலகைகளையும், மற்றும் மிதக்கும் பொருட்களையும் எடுத்துக்கொண்டு கடலில் குதித்தனர். கர்னல் ஸ்காட்டின் உத்தரவுப்படி, கடலில் குதித்தவர்கள், அங்குள்ள படகுகளை நோக்கிச் செல்லாது, மரத்துண்டுகளைப்பற்றிய வண்ணமே மிதந்தனர். சிலர், அவர்களில் நீந்தத் தெரியாதவர்களுக்கு உதவியவண்ணம் இருந்தனர்.

எல்லாக் கடமைகளையும் செவ்வனே ஆற்றியபின், கப்பற் தலைவனும், கப்பற்படைத் தளபதியும் கடைசியாகக் குதித்தனர். கப்பலில் தீயோ எரிந்தவண்ணமிருந்தது, கப்பலும் சிறிது சிறிதாக மூழ்கலாயிற்று. சில நேரங்கழிந்தது. கடலில் மிதந்துகொண்டிருந்தவர்கள், உள்ளத்திலே உறுதியாகத்தானிருந்தனர். உற்சாகம் சிறிதும் குன்றவில்லை. தொடுவானத்திலே உதவிக் கப்பலின் உருவம் தோன்றலாயிற்று. அங்குள்ளவர்களின் இதழ்களுடே புன்சிரிப்பு மின்னியோடியது. முகம் மகிழ்ச்சிப் பொங்கலாயிற்று. அரைமணிநேரத்தில் மூன்று கப்பல்கள் உதவிக்கு விரைந்தன. இயந்திர அறையினிலே தீயினாலும் புகையினாலும் மாண்ட நால்வரைத் தவிர மற்ற யாவரும் காப்பாற்றப்பட்டனர்.

இம்முறையிலே, பல விபத்துக்குள்ளான கப்பலில் உள்ளவர்கள், கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து, மரணத்தின் பிடியிலிருந்து தப்பியிருக்கின்றனர். 'டிடானிக்' என்ற பெரியகப்பலொன்று 2201 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு வட அட்லாண்டிக்கில் சென்றுகொண்டிருக்கும்போது, பனிப்பாறையினால் மோதப்பட்டுக் கப்பல் உடைத்து எறியப்பட்டது. இந்நிலையிலே, யாவரும் ஒழுங்கை நிலைநாட்டிக் கடமையை ஆற்றலாயினர். இயந்திர அறையிலே 37 இயந்திர இயக்குநர் தங்கள் கடமையைச் செய்த வண்ணமிருக்க, கப்பலில் மேல் தளத்திலே எண்மர் இசைக்கருவிகளை இசைத்தவண்ணம் இருந்தனர். அவர்தம் இடங்களை விட்டு அகன்றாரில்லை, அக்கடமை வீரர்கள். உயிர் தப்பும் படகுகளில், பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் முதலிடம் தரப்பெற்றது. ஆயினும், பலர் அதில் மாண்டனர். அக்கப்பலிலுள்ள பிரயாணிகள் 'பர்க்கன் கெட் டிரில்' என்ற ஒழுங்குமுறையையும் கட்டுப்பாட்டையும் பின்பற்றி ஆங்கிலநாட்டுச்சரிதத்திலேயே நல்லதொருஇடத்தைத் தேடிக்கொண்டனர். ✱

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.




காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.